அவர்களின் பிறந்த நாளான இன்று இந்தக் கேள்வியை எழுப்பியமைக்கு நன்றி.

எல்லைக் காவலர்களைப் பொறுத்தவரையில், கன்னியாகுமரி மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள எல்லைக் காவலர்கள் 1982 பேருக்கு தமிழக அரசாங்கத்தின் மூலமாக இதுவரை ஓய்வூதியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லைக் காவலர்கள் 1098 பேர் உயிருடன் இருக்கிறார்கள்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய மரபு உரிமையர் 884 பேருக்கு இப்பொழுது கொடுத்துக்கொண்டிருக்கிறோம். எத்தனையோ வருடங்கள் ஆனதனால் delay ஏற்பட்டிருக்கிறது. கண்டிப்பாக எல்லாவிதத்திலும், தகுதி படைத்தவர்கள் இருக்கும்பட்சத்தில், 30 வருடங்கள், 40 வருடங்கள் ஆனால்கூட, revenue record–ஐப் பார்த்து check செய்வதற்கு கொஞ்சம் delay ஆகிறது. இருப்பினும், தகுதி படைத்த அனைவருக்குமே, இத்தனை வருடங்கள் ஆனாலும்கூட, கொடுப்பதற்கு தமிழக அரசாங்கம் ready ஆக இருக்கிறது என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

209—

திருமண மண்டபம்

***16327—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, துவரங்குறிச்சியிலுள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2018 ஜூன் 25]

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் மற்றும் தங்களையும் வணங்கி, எனது விடையை இம்மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், துவரங்குறிச்சி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டுவது குறித்து செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்ற உயரிய தத்துவத்தை தன் வாழ்நாளில் இறுதிவரை கடைப்பிடித்து, நம்மையெல்லாம் வாழ வைத்துக்கொண்டிருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், எளிமையின் சிகரம் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

பட்டுக்கோட்டை வட்டம், துவரங்குறிச்சி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மிகவும் பிரசித்திபெற்ற தலமாகும். இங்கே பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்த மக்களும் தங்கள் இல்லத் திருமணத்தை நடத்தி வருகின்றார்கள். இதைச் சுற்றியுள்ள 20 கிராமங்களிலிருந்து மட்டுமல்லாது, வெளியூர்களிலிருந்தும் இங்கே வந்து திருமணத்தை நடத்திச் செல்கின்றனர். இங்கு போதுமான இட வசதியும் இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையிலே, அங்கே ஒரு திருமண மண்டபத்தைக் கட்டித் தர மறுபரிசீலனை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 136 திருக்கோயில்களில், 166 திருமண மண்டபங்கள் உள்ளன. தற்போது 10 திருக்கோயில்களில் புதியதாக திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், துவரங்குறிச்சி, அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் முக்கிய வருமானம், உண்டியல், ticket மற்றும் காணிக்கையின் மூலமாக வரப்பெறுகின்றது. இத்திருக்கோயிலில் 15–9–2015 ஆம் ஆண்டு முதல் 'அன்னதானத் திட்டம்' தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. மேலும் இத்திருக்கோயிலை ஒட்டி கட்டப்பட்டுள்ள பழமையான மண்டபத்தில் வருடம் ஒன்றிற்கு 30 முதல் 40 வரையிலான திருமணங்கள், காதணி விழா போன்ற சுபகாரியங்கள் அவ்வப்போது நடைபெற்று வருகின்றன. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு, திருமண மண்டபம் கட்டுவது குறித்து, போதிய இட வசதி, நிதி வசதி மற்றும் பக்தர்களின் பயன்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்து, வாய்ப்பிருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்ற நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லையென்றாலும், அவசியம் கருதி, இந்தக் கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். பட்டுக்கோட்டை தொகுதி, மதுக்கூர் பேரூராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க அறநிலையத் துறையின் இடம் தேர்வு செய்யப்பட்டு, துறைரீதியான அனுமதிக்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதைப்போல, தமிழ்நாட்டிலுள்ள பல இடங்களில் இந்த நிலை இருந்து வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர்

அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, கொள்கைரீதியாக ஒரு முடிவெடுத்து, உரிய சட்டத் திருத்தத்தின்மூலம் பொதுக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படும் இடங்களை உடனடியாக வழங்கி, இந்தத் திட்டங்கள் நிறைவேற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கோரிக்கை தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறைக்குக் கடிதம் கொடுத்து, உரிய துறையின் மூலமாக அதற்குரிய பணத்தைச் செலுத்தினால், அந்த இடம் விரைவாகக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.

திரு. ஆர். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த வாய்ப்பை நல்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலில் திருமண மண்டபம் இருக்கின்றது. அந்த மண்டபத்தில் ஒரு நாளைக்கு ஒரு திருமணம்தான் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வருடத்திற்கு சுமார் 57, 60 திருமண முகூர்த்த நாட்கள் இருக்கின்றன. அங்கு திருமணம் நடத்த அனுமதி தர வேண்டுமென்று ஏழை மக்களிடமிருந்து நிறைய கோரிக்கைகள் வருகின்றன. ஒரு நாளைக்கு ஒன்று என்றில்லாமல், அதிகமான திருமணங்களை நடத்துவதற்கான அனுமதியைத் தர வேண்டும். அந்தத் திருக்கோயிலில் இட வசதியும் உள்ளது. எனவே, அதனைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக நான் கோரிக்கை வைக்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[*2018 ஜூன் 25*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, அந்தத் திருக்கோயிலில் விரும்பிய நபர்களும், சேவார்த்திகளும் திருமணங்களை நடத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று, அனுமதிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

210—

மாணவர் விடுதி

***5137—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மணல்மேடு அரசு கல்லூரி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவினை, மயிலாடுதுறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்.